**அ.வ.எண். 287/2023**
**வா.சா.1 : சத்தியவாணி**
**தேதி : 21.01.2026**
**<u>சாட்சி முன்னிலையாகி, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,</u>**
**<u>1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

எனக்கு 30 வருடங்களுக்கு முன்பு திருமணமானது. 2ம் பிரதிவாதி தன் விருப்பம் போல் திருமணம் செய்து கொண்டார் எப்போது திருமணம் செய்து கொண்டார் என்று எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி எப்போது திருமணம் செய்து கொண்டார் என்று எனக்கு தெரியாது. வாதிகள் இருவரும் திருமணத்திற்கு பிறகு அவரவர் கணவர் வீட்டில் தான் வசித்து வருகிறோம். மேலும் வாதிகள் அவரவர் கணவரது சொத்தில் விவசாயம் செய்து கொண்டு வருகிறோம். என் அப்பாவின் அப்பாவிற்கு தாவா சொத்து எப்படி பாத்தியம் என்று எனக்கு தெரியாது. முத்துச்சாமிக்கவுண்டரின் தகப்பனார் பெயர் தேவனக்கவுண்டர், செல்லம்மாள் என்று சொன்னால் எனக்கு தெரியாது. முத்துச்சாமிக்கவுண்டரின் மகளின் பெயர் பாப்பாத்தி. பாப்பாத்தி இன்று வரை உயிருடன் தான் இருக்கிறார். பாப்பாத்தியை இவ்வழக்கில் கட்சி சேர்க்கவில்லை என்று சொன்னால் சரிதான். முத்துச்சாமிக்கவுண்டர் மற்றும் அவரது மனைவி பழனியம்மாள் எப்போது இறந்தார்கள் என்று எனக்கு தெரியாது. முத்துச்சாமிக்கவுண்டருக்கு 2 மகன்கள், 2 மகள்கள் உள்ளார்கள். முத்துச்சாமிக்கவுண்டரின் மகன்கள் மற்றும் மகள்கள் பாகம் பிரித்துக்கொள்ளவில்லை. முத்துச்சாமிக்கவுண்டருக்கு என் தகப்பனார் கிருஷ்ணசாமி என்பவரும், முத்துச்சாமி கவுண்டரின் மகள்கள் பெயர் பாப்பாத்தி மற்றும் செல்லம்மாள், மற்றொரு சகோதரர் பெயர் தெரியாது. என் தகப்பனார் கிருஷ்ணசாமியும் அவர் சகோதரர்களும் பாகம் பங்கியுள்ளனர். அந்த பாகத்தில் வந்த சொத்துக்கள் தான் தாவா சொத்துக்கள். தாவா

சொத்துக்கள் என் தகப்பனார் தாயார் உயிருடன் இருக்கும் வரை அவர்கள் தான் விவசாயம் செய்து வந்தார்கள். வா.சா.ஆ.2 ஆவணத்தில் பாப்பாத்தியை ஒரு வாரிசாக சேர்க்கவில்லை என்று சொன்னால் எனக்கு தெரியாது. உங்கள் பிரமாண வாக்குமூலத்தில் 10 வது பத்தியில் கூறியுள்ள விஜயமூர்த்தி, இந்திராணி எந்த விவசாயமும் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் நாங்களும் பிரதிவாதிகளும் ஒன்றாகத்தான் விவசாயம் செய்து வருகிறோம் எவ்வித பாகமும் பிரிக்கவில்லை என்று சொன்னால் சரிதான். எனக்கு எவ்வளவு பாக விகிதாச்சாரம் வரும் என்று தெரியாது. 21.12.2022 ல் பாகப்பாத்திய விடுதலைப்பத்திரத்தை பற்றி உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியாது. 1ம் பிரதிவாதியின் மகள்கள் கார்த்திகா மற்றும் சுவேதா. 1ம் பிரதிவாதிக்கு ஆண்வாரிசுகள் கிடையாது. 4 வது பிரதிவாதியை நாங்கள் வழக்கில் சேர்க்கவில்லை என்று சொன்னால் சரிதான். எனக்கு சேர வேண்டிய பாகத்தை கேட்டு 1ம் பிரதிவாதியிடம் எவ்வித சுமூக பேச்சுவார்த்தையும் நடத்தவில்லை என்று சொன்னால் சரிதான். பிரதிவாதிகள் ஆள்பலம், பணபலத்தை கொண்டு வாதிகளை மிரட்டுவதாக கூறுவது வாதிகள் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். தாவா சொத்துக்கள் அனைத்தும் என் தகப்பனார் கிருஷ்ணசாமி 14.05.1984 தேதியில் தனிப்பட்ட முறையில் கிரையம் வாங்கப்பட்ட சொத்துக்கள் என்று சொன்னால் சரியல்ல. நானும், 2ம் வாதியும் எங்கள் கணவர் ஊரில் தான் வசிக்கிறோம். 2 வது அயிட்ட சர்வே எண்.28-ல் கிருஷ்ணசாமியும், 1ம் பிரதிவாதியும் 2005-ல் 24 செண்டை விற்றுவிற்றார்கள் என்று சொன்னால் எனக்கு தெரியாது. என் தகப்பனார் இருக்கும் வரை எதையும் விற்கவில்லை. 3 வது அயிட்ட சொத்தை 09.03.1994 ல் உங்கள் தகப்பனாரும் 1ம் பிரதிவாதியும் சேர்ந்து விற்றுவிட்டார்கள் என்று சொன்னால் அவ்வாறு எதவும் செய்யவில்லை. 1

முதல் 3 பிரதிவாதிகள் அவர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களைத்தான் விற்றுள்ளார்கள் என்றும் உங்களுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை விற்கவில்லை என்று சொன்னால் அதற்கு கிரையத்தொகையில் ஒரு பாகத்தை எங்களுக்கு தருவதாக கூறி பிரதிவாதிகள் எங்களை ஏமாற்றிவிட்டார்கள். பிரதிவாதிகள் உங்களுக்கு சேரவேண்டிய பாகத்தை தரவிருப்பமாகத்தான் உள்ளார்கள். தாவாவில் பாகவிகிதத்தை சரிவர கேட்காததால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.01.21 18:09:22 +0530

மாவட்ட நீதிபதி,
கரூர்.